

அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், எந்தவொரு மாவட்டத்துக்குச் சென்றாலும் அங்குள்ள அரசு மாணவர் விடுதிகளில் தொடர்ந்து ஆய்வு மேற்கொண்டு வருகிறார். இதன் தொடர்ச்சியாக, செங்கல்பட்டு மாவட்டம் –வல்லம் பகுதியில், ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கி வரும் அரசுக் கல்லூரி மாணவர் விடுதியில் நேற்று ஆய்வு செய்தார். விடுதி மாணவர் பதிவேடு, சமையல் கூடம், உணவருந்தும் இடம், உணவுப்பொருள் சேமிப்பு அறை, மாணவர்கள் தங்கும் அறை, கழிவறை உள்ளிட்ட இடங்களில் ஆய்வு செய்து, விடுதியில் உள்ள வசதிகள் குறித்து மாணவர்களிடம் கேட்டறிந்தார். விடுதி மாணவர்களுக்கு அனைத்து வசதிகளும் தரமுடன் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று விடுதி காப்பாளர் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் அதிகாரிகளை அறிவுறுத்தினார்.



செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூரில் உள்ள அரசு மருத்துவமனையில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று மாலை திடீர் ஆய்வு மேற்கொண்டார். புறநோயாளிகள் பதிவு செய்யுமிடம் மருந்து மாத்திரைகள் வழங்குமிடம் சிகிச்சைக்கான வார்டுகள் கழிப்பறைகளுக்கு சென்று, அவற்றின் நிலையை ஆய்வு செய்தார். மேலும், சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தோர் மற்றும் அவர்களின் உறவினர்களிடம் அங்குள்ள வசதிகள் சிகிச்சையின் தரம் பற்றி கேட்டறிந்தார். சிறு நகரங்களிலும் வலுவான சுகாதாரக் கட்டமைப்பைக் கொண்டுள்ள மாநிலம் தமிழ்நாடு என்பதை உறுதிப்படுத்திடும் வகையில், செயலாற்றிட வேண்டுமென திருப்போரூர் அரசு மருத்துவமனை மருத்துவர்கள் செவிலியர்கள் சுகாதாரப் பணியாளர்களை அறிவுறுத்தினார்.



திராவிட மாடல் அரசு அமைந்தது முதல், மாநிலத்தின் உள்கட்டமைப்பை பெருக்கி அதன் மூலம் வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கு பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருவதறிவோம். இதன் ஒரு பகுதியாக – செங்கல்பட்டு மாவட்டம் கேளம்பாக்கத்தில், மாநில நெடுஞ்சாலைத் துறையால் மேற்கொள்ளப்பட்டு வரும் புறவழிச்சாலை மற்றும் பாலம் அமைக்கும் பணிகளை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், துறைசார்ந்த அதிகாரிகள் அலுவலர்களுடன் நேற்று ஆய்வு செய்தார். கேளம்பாக்கம் பகுதியில் போக்குவரத்து நெரிசல் இல்லாத சூழலை ஏற்படுத்திடும் வகையில், இத்திட்டப் பணியை விரைந்து முடித்திட வலியுறுத்தினார்.

### இந்தியாவுக்கே வழிகாட்டும் ‘திராவிட மாடல் அரசு’

# பெண்களின் ஆதரவு இந்தியா கூட்டணிக்கு வெற்றியை அளிக்கும் என்பது உறுதி!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, அக். 18 - அகில இந்திய அளவில் மகளிர் முன்னணித் தலைவர்களை எல்லாம் அழைத்து தி.மு.க. மகளிரணி சார்பில் சென்னையில் கூட்டப்பட்ட மாநாடு பாராட்டத்தக்கது. இன்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே ‘பெண் ஏன் அடிமையானாள்?’ என்பது பற்றிச் சிந்தித்து கருத்துப் போர் நடத்தியவர் தந்தை பெரியார் என்று பிரியங்கா காந்தி குறிப்பிட்டது வரவேற்கத்தக்கது. பெண்களுக்குச் சொத்துரிமை அளித்தது தி.மு.க. அரசும் அய்க்கிய முற்போக்குக் கூட்டணி அரசுமே! 2024 மக்களவைத் தேர்தலில் 50 விழுக்காடுள்ள பெண்களின் வாக்கு “இந்தியா கூட்டணிக்கு” மகத்தான அளவில் கிடைக்கும். இந்திய கூட்டணிக்கு வெற்றி உறுதி என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

மகளிர் நம் நாட்டு மக்கள் தொகையில் சரி பகுதியினர்.

140 கோடி இந்திய மக்கள் தொகையில் 70 கோடி பேருக்கு மேற்பட்டவர்கள்.

வாக்களிக்கும் வாக்கு வங்கியிலும் அவர்கள் 50 விழுக்காட்டினர்.

என்றாலும், அவர்களுக்குரிய பாலியல் நீதியோ, சமூக நீதியோ, உரிய வகையில் போதிய அளவில் (ADEQUATE) இந்த 75 ஆண்டு சுயராஜ்யத்தில் கிட்டவில்லை.

**பெண்களுக்கு சொத்துரிமை சட்டம் வந்தது எப்போது?**

புரட்சியாளர் டாக்டர் அம்பேத்கரின் பெண்களுக்கான சொத்துரிமை சட்டத்தை நிறைவேற்ற விடவில்லை அதனாலேயே அவர் அமைச்சர் பதவியிலிருந்து விலகி வெளியேறினார். பிறகு 2005இல் தி.மு.க. பங்கேற்ற காங்கிரஸ் தலைமையிலான அய்க்கிய முற்போக்குக் கூட்டணி அமைச்சரவையில் தி.மு.க.வின் பேராதரவுடன் அந்த சொத்துரிமைச் சட்டம் பெரியார் அம்பேத்கர் விழைவு சட்டமாகி செயலுருக் கொண்டது வரலாறு ..

அதற்கு முன்பே முதலமைச்சர் கலைஞர் தமிழ்நாட்டில் மகளிருக்கு சொத்துரிமை சட்டம் கொணர்ந்து நிறைவேற்றி தந்தை பெரியாரின் செங்கற்பட்டு சுயமரியாதை மாகாண மாநாட்டின் தீர்மானத்தை மகளிர் பயனுறு உரிமைச் சட்டமாக்கினார்.

**இந்தியாவுக்கு எப்பொழுதும் வழி காட்டுவது ‘திராவிட மாடல்’ அரசே!**

இந்தியாவுக்கே எப்போதும் வழிகாட்டும் கலங்கரை விளக்கு தமிழ்நாட்டின் ‘திராவிட மாடல்’ ஆட்சிதானே!

ஆனால் “நாரி சக்தி கடவுள் சக்தி” என்று கூவிக்கொண்டே, தேர்தல் உத்தியாக இந்த நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மகளிருக்கு 33 சதவிகித நாடாளுமன்ற, சட்டமன்ற தொகுதி இடஒதுக்கீடு சமூகநீதி பிற்படுத்தப்பட்ட சமூகப் பெண்களுக்கு வழங்கிய சமூகநீதி இல்லாத ஒருசட்டம், வெறும் “மாயமான் வேட்டையாகவும், பயனில்லாத கானல் நீர் போன்றும் சட்டம் நிறைவேறியது; ஆனால், அதன் அமல் எத்தனை ஆண்டுகள் கழித்து நடைமுறைக்கு வரும் என்பது உறுதியாக கூற முடியாது.

காரணம் (1) பொதுக் கணக்கெடுப்பு (Census) முடிய வேண்டுமாம்.

(2) தொகுதி மறுவரையறை முடிய வேண்டுமாம்.

என்னே மோசடி! எவ்வளவு ஏமாற்று வித்தை!!

இதையெல்லாம் அனைத்திந்திய மகளிரும் உணர்ந்துள்ளதால் மீண்டும் ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க. ஆட்



சியை மோடி ஆட்சியை வரவிடாமல் செய்து, ‘இந்தியா’ கூட்டணியை வெற்றி பெறச் செய்து அந்த ஆட்சி வந்தவுடன், அந்த இரண்டு நிபந்தனைகளை விலக்கி விட்டு உடனடியாக மகளிர் இடஒதுக்கீடு சட்டத்தை எழுந்து நடமாடச் செய்வோம் என்ற உறுதியை சென்னையில் நமது முதலமைச்சர் சமூகநீதிக்கான சரித்திர நாயகர் விழைவுப்படியும், ஆணைப்படியும், தி.மு.க.வின் மகளிர் அணி பொறுப்பாளர், துணைப் பொதுச் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர், பகுத்தறிவுக் கவிஞர் கனிமொழி கருணாநிதி அவர்கள் மிகக் குறுகிய காலத்தில் ஏற்பாடு செய்த சென்னை மகளிர் உரிமை மாநாடு வரலாறு படைத்துள்ளது!

**சென்னையில் மகளிர் உரிமை மாநாடு ஏற்பாடு பாராட்டத்தக்கது!**

இந்தியாவின் அனைத்து மாநிலங்களின் மகளிர் உரிமைப் போராளிகளான மகளிர் அணி தலைவர்களை அழைத்து, அதில் முழங்க வைத்தது ஒரு புதிய வெளிச்சத்தை, கூடு தல் நம்பிக்கையை அனைத்து மக்களுக்கும் ஏற்படுத்தியுள்ளது!

புதிய விடியலுக்கான வெள்ளி முளைக்க வேண்டுமானால், அது மகளிரால் மட்டுமே முடியும் என்பதை உலகுக்கு உணர்த்தி விட்டார்கள்.

காங்கிரஸ் பேரியக்கத்தின் சீரிய தலைவர் திருமதி சோனியா அம்மையார் இவர் பிரதமர் பதவியை மறுத்த தியாகச் செம்மல் மற்றும் காஷ்மீர் மேனாள் முதலமைச்சர் மெகபூபா, அகில இந்திய காங்கிரஸ் கட்சி பொதுச் செயலாளர் பிரியங்கா, மராத்திய தேசிய வாத கட்சி எம்.பி. சுப்பிரியா சுலே, பீகாரில் இருந்து லெஷிசிங், டில்லி சட்டப் பேரவைத் துணைத் தலைவர் ராக்கிபிட்லன், உத்தரப்பிரதேசம் மேனாள் முதலமைச்சர் அகிலேஷ் யாதவின் இணையர் டிம்பிள் யாதவ், சமாஜ்வாதி கட்சியின் மகளிரணி தேசியத் தலைவர் ஜுஹி சிங், மம்தாவின் பிரதிநிதியாக சுஷ்மிதா தேவ், இடதுசாரி இயக்கங்கள் சார்பில் சுபாஷினி அலி, ஆனி ராஜா உள்பட பலரும் கலந்து கொண்டு பெரியார் மண்ணில் கருத்தாழத்துடன் சூளுரை செய்தனர்!

**தந்தை பெரியாரின் சிந்தனையை பெருமையுடன் பேசிய பிரியங்கா காந்தி**

பெரியார் தம் தொண்டறமும் முன்னோட்டமும் எப்படி ஒரு நூறு ஆண்டுகளுக்கு முன் உரிமைக் குரலுக்கு அடி எடுத்து உணரச் செய்தது. “பெண் ஏன் அடிமையானாள்” என்று கேட்டவர் தந்தை பெரியார் என்று பிரியங்கா முழங்கியதைக் கேட்டு நெஞ்சம் பூரிக்கிறது.

பிரியங்கா காந்தி அதனை முக்கியமாகக் குறிப்பிட்டது வரவேற்கத்தக்கது.

பெரியார் ஒரு சமுதாய விஞ்ஞானி, ஓர் போராயுதம் என்பதை பிரகடனப்படுத்திக் கொண்டு சரியான நேரத்தில், சரியான ஆயுதத்தை எறிந்து களமாட அழைப்பு விடுத்துள்ளது ‘இந்தியா’ கூட்டணி என்பதை கண்டு உவகையுடன் பாராட்டி மகிழ்கிறோம்.

**இப்படை தோற்கின் எப்படை வெல்லும்**

இதற்குக் காரணமான ‘திராவிட மாடல்’ முதல் அமைச்சர் அவர்களையும், கவிஞர் கனிமொழி கருணாநிதி எம்.பி., அவர்களையும் தி.மு.க. மகளிரணி உடன் பிறப்புகளையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

‘இப்படை தோற்கின் எப்படை வெல்லும்?’ என்று புறநானூற்று மகளிர் போல புறப்பட போர்ச் சங்கு ஊதி விட்ட மகளிரே! உங்களுக்கு எங்கள் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகள்!

களமாட வந்துள்ள நீங்கள் 2024 தேர்தலில் வெற்றி வாகை சூடிட ஆயத்தமாகி விட்ட அறைகூவல் நிச்சயம் வெற்றிக் கனியைப் பறிக்கும். காரணம் நீங்கள் பெரியார் என்ற சரியான ஆயுதத்தைக் கையில் எடுத்து விட்டீர்கள்!

நம் முதலமைச்சர் அவர்களும் அதற்கு வழி காட்டும் நெறியாளராக இன்று இருப்பது, வெற்றியை நிச்சயம் உறுதி செய்யும் வெற்றி இந்தியா கூட்டணிக்கே!

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

### தி.மு.க. தகவல் தொழில் நுட்ப அணி

# மாவட்ட ஒருங்கிணைப்பாளர் துணை ஒருங்கிணைப்பாளர்கள் நியமனம்!

**தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, எம்.எல்.ஏ., அறிவிப்பு**

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. தகவல் தொழில் நுட்ப அணியின் சென்னை மேற்கு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் துணை ஒருங்கிணைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**சென்னை மேற்கு மாவட்டம்**

சென்னை மேற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்ட ஆர்.கோபால் ராம் அவர்களை, அவர் வகித்து வந்து பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக,

**ஜி.வி.சரவணன்** அவர்கள் சென்னை மேற்கு மாவட்ட மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராகவும்;

மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளராக (ஆயிரம் விளக்கு) களப்பணிக்காக நியமிக்கப்பட்ட ஜி.வி.சரவணன் அவர்களுக்குப் பதிலாக **ஆதவன்வர்ஷன்** அவர்கள் மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளராக (ஆயிரம் விளக்கு) (களப்பணி)வும்;

மாவட்டத் துணை ஒருங்கிணைப்பாளராக (சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி) (களப்பணி) நியமிக்கப்பட்ட ஆர்.தேசிங்கு அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக **சாகுல் அமீது** அவர்கள் மாவட்டத் துணை ஒருங்கிணைப்பாளராக (சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி) (களப்பணி)வும்;

மாவட்டத் துணை ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைத்தளம்) நியமிக்கப்பட்ட செ.லோகராஜ் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக **மு.வினோத்** அவர்கள் மாவட்டத் துணை ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைத்தளம்) வும் நியமிக்கப்படுகிறார்கள்.

மாவட்டத் துணை ஒருங்கிணைப்பாளர் (அண்ணா நகர்)ராக பணியாற்றி வரும் **ஜெயகுமாரன்** அவர்கள் தொடர்ந்து மாவட்ட துணை ஒருங்கிணப்பாளராக (அண்ணாநகர்)வும், அதைப்போல, மாவட்டத் துணை ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) - பணியாற்றி வரும் டாக்டர். **எஸ்.ஐ.பி.ஷேக் ஆரிபா** அவர்கள் தொடர்ந்து மாவட்டத் துணை ஒருங்கிணைப்பாளராக (மகளிர்)வும் தொடர்ந்து பணியாற்றுவார்கள்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை 18.
நாள் : 17-10-2023.

அமைச்சர் **முனைவர் டி.ஆர்.பி.ராஜா,**
செயலாளர்,
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி

### இந்தியாவையே திரும்பிப்பார்க்க வைத்த மகளிர் உரிமை மாநாட்டை

# தலைமையேற்று சிறப்புற நடத்திக் கொடுத்த முதல்வருக்கு நன்றி!

## ஜெ.ஹெலன் டேவிட்சன் - நாமக்கல் பா.ராணி அறிக்கை!

சென்னை, அக். 18 - கழக மகளிர் அணிச் செயலாளர் ஜெ.ஹெலன் டேவிட்சன், மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ராணி ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

“ இந்தியாவை திரும்பி பார்க்க வைத்த தி.மு.கழக மகளிர் உரிமை மாநாடு. ”பெண்களின் முன்னேற்றமே சமுதாய முன்னேற்றமென ஓயாது உழைத்தவர் தமிழினத்தலைவர் கலைஞர் அவர்கள்.அவரது நூற்றாண்டை முன்னிட்டு தி.மு.கழக மகளிர் அணி ஒருங்கிணைப்பில் மகளிர் உரிமை மாநாட்டினை தலைமை தாங்கி சிறப்புற நடத்தி கொடுத்த தி.மு கழகத்தின் தலைவர், தமிழ நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களுக்கும்

இண்டியா கூட்டணியின் பெண் தலைவர்களை ஒருங்கே இணைத்து வரலாற்றுச் சிறப்பு மிக்க இம் மாநாட்டினை வெற்றி மாநாடாக முன்னின்று செய்த கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி.,

கழக பொதுச் செயலாளர் அமைச்சர் துரை முருகன் விழாவினில் பங்கேற்று சிறப்பித்த இண்டியா கூட்டணிக் கட்சித் தலைவர்கள் கழக பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி., கழக முதன்மை செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு மற்றும் கழகத்தின் துணை பொது செயலாளர்கள் விழாவினில் பங்கேற்பு செய்து சிறப்பித்த அமைச்சர் பெருமக்களுக்கும் மகளிர் மாநாட்டு நிகழ்ச்சியினை முன்னின்று செய்து சிறப்பானதொரு முறையில் விழா ஏற்பாட்டினை செய்து கொடுத்த அமைச்சர்கள் மா. சுப்பிரமணியன் , அமைச்சர் தா. மோ. அன்பரசன் ஆகியோரும் தலைமைக் கழக நிர்வாகிகளுக்கும், மாவட்ட கழக செயலாளர்களுக்கும், பாராளுமன்ற, சட்டமன்ற முன்னாள் இந்நாள் உறுப்பினர்களுக்கும் கழகத்தின் சார் பணி நிர்வாகிகளுக்கும் , 2024 பாராளுமன்ற தேர்தலில் ஒன்றிய அரசில் ஒரு மாற்றத்தை உருவாக்கும் வகையில் வெற்றி மாநாடாக்கிய சிறப்பாக செயல்பட்ட கழக தூண்களாம் மகளிரணியின் அன்புச்சகோதரிகள் அனைவருக்கும் மற்றும் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், மாநகர, ஒன்றிய, நகர மற்றும் பேரூர் பகுதி கழக நிர்வாகிகள் அனைவருக்கும் மற்றும் ஏனைய கழக நிர்வாகிகள், உறுப்பினர்கள் அனைவருக்கும் கழகத்தின் மாநில மகளிரணி மற்றும் மாநில மகளிர் தொண்டரணியின் சார்பாக மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

### வேடசந்தூர் சட்டமன்றத் தொகுதி வடமதுரை பேரூர் கழகத்தின் சார்பில்

# வாக்குச்சாவடி குழு உறுப்பினர் ஆலோசனைக் கூட்டம்!

திண்டுக்கல், அக்.18- திண்டுக்கல் மேற்கு மாவட்டம் வேடசந்தூர் சட்டமன்றத் தொகுதி வடமதுரை பேரூர் கழகத்தின் சார்பில் வாக்குச்சாவடி குழு உறுப்பினர் ஆலோசனைக் கூட்டம் வடமதுரையில் உள்ள தனியார் மஹாலில் நடைபெற்றது. கூட்டத்திற்கு தேர்வு செயலாளர் கணேசன் தலைமை வகித்தார்.

அய்யலூர் மற்றும் வடமதுரை வேல்வார்கோட்டை காணப்பாடி சிங்காரக் கோட்டை வேலாயுதம்பாளையம் ஆகிய ஊராட்சிகளை சேர்ந்த வாக்குச்சாவடி பாகநிலை முகவர்கள் மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் பாராளுமன்ற தேர்தல் குறித்த பயிற்சிகள் மற்றும் தேர்தலை எதிர்கொள்ளும் முறைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் வடமதுரை ஒன்றிய கழக செயலாளர் சுப்பையன், தொகுதி பொறுப்பாளர் கோவை நாச்சிமுத்து சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார். வடமதுரை பேரூராட்சி தலைவர் நிருபா ராணி கணேசன், அய்யலூர் பேரூர் கழகச் செயலாளர் கருப்பன் மற்றும் மாணவரணி செயலாளர்கள், ஒன்றிய கவுன்சிலர்கள் ஒன்றிய, பேரூர், நகர கிளைச் செயலாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



முதலமைச்சர் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, அமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி தி.மு.க சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. தலைமையில் வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை, கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு, தருமபுரி கிழக்கு, தர்மபுரி மேற்கு, சேலம் கிழக்கு, சேலம் மேற்கு, சேலம் மத்திய, கோவை வடக்கு, கோவை தெற்கு, கோவை மாநகர், நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு, திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு, ஈரோடு வடக்கு, ஈரோடு தெற்கு ஆகிய மாவட்டங்களுக்குட்பட்ட கழக வழக்கறிஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், தலைவர், துணைத் தலைவர் ஆலோசனைக் கூட்டம் சேலம் ஓட்டல் ரேடிசனில் நடைபெற்றது. இந்த ஆலோசனை கூட்டம் சேலம் மத்திய மாவட்ட கழக செயலாளர் இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ., சட்டத்துறை இணை செயலாளர்கள் கே.எஸ்.இரவிச்சந்திரன், ராதாகிருஷ்ணன், அருள்மொழி, கே.எம்.தண்டபாணி, தாமரைச் செல்வன், துணை செயலாளர் பச்சையப்பன், தலைமைக் கழக வழக்கறிஞர்கள் சரவணன், கவிகணேசன் மற்றும் மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.




தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தலைவர் பூச்சி எஸ்.முருகன் தலைமையில் வீட்டு வசதி வாரியக் கூட்டம் கோயம்பேடு வாரியத் தலைமை அலுவலகத்தில் நேற்று (17.10.2023) நடைபெற்றது. இதில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் அபூர்வா வீட்டு வசதி வாரியத்தின் மேலாண்மை இயக்குனர் சரவணவேல்ராஜ், சென்னை பெருநகர வளர்ச்சி குழும உறுப்பினர் செயலாளர் அன்சுல் மிஸ்ரா, நகர ஊரமைப்பு இயக்க துறை இயக்குநர் கணேசன், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் பி.சங்கர், நிதித்துறை துணை செயலாளர் சிபி ஆதித்யா செந்தில்குமார், வாரிய நிதி ஆலோசகர் கோவிந்தராஜ், வாரிய செயலாளர் மற்றும் பணியாளர் அலுவலர் சரவணமூர்த்தி, தலைமை பொறியாளர்கள் கண்ணன், சரவணன், வீட்டு வசதி வாரிய தலைமை வருவாய் அலுவலர் புண்ணியகோடி, பெருநகர சென்னை மாநகராட்சி மாவட்ட வருவாய் அலுவலர் குலாம் ஜிலானி பாப்பா, மாவட்ட வருவாய் அலுவலர்(திட்டங்கள்) திருமதி. ஃபர்கத் பேகம், மாவட்ட வருவாய் அலுவலர் (நில எடுப்பு) அன்பழகன் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.